REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 28உ சனி (12—3—55) ★ ★ வெளியூர்: மாசி 29உ ஞாயிறு (13—3—55) [இதழ் 231

'பென்சிலின்' கண்டவர் மறைவு

லண்டன், மார்ச் 11—

'பென்சிலின்' என்ற அரிய மருந்தைக் கண்டுபிடித்தவரான சர். அலெக்சாண்டர் பிளெமிங் என்பவர், இன்று லண்டனில் தனது 73-வது வயதில் மாரடைப்பினால் இறந்தார். 1945-வது ஆண்டில், மருந்துக்காகத் தரப்படும் நோபல் பரிசை சர். அலெக்சாண்டர் பெற்றார். அவருடன் சர். அவார்ட் புளோரி, டாக்டர் யெர்னஸ்ட் போரிஸ் செய்ன் என்ற இருவரும் பரிசு பெற்றனர்.

பல நாடுகளில் அவருக்கு விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன. உலகப் பல்கலைக் கழகங்கள் பல அவருக்கு 'டாக்டர்' எனும் சிறப்புப் பட்டம் வழங்கியிருக்கின்றன. மருத்துவத் துறை நூல்கள் சிலவும் அவர் இயற்றியுள்ளார்.

கலப்பு மண வரலாற்றிலே ஒரு பொன்னேடு

பிற ஜாதி பெண்களையே மணப்பதென தீர்மானம்

மைசூர் கல்லூரி மாணவர்களின் மனப் புரட்சி

யுவதிகள் ஒதுங்கி நிற்கின்றனர்

மைசூர், மார்ச் 11—

இந்துமதக் கட்டுக்கோப்பிற்குள்ளாக ஜாதி பேத மற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் கருத்துடன் தங்கள் ஜாதியைச் சேராத பிறஜாதிப் பெண்களையே மணந்து கொள்வது என கல்லூரி மாணவர்கள் பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ளனர்.

'உள்ளடி அமைதிக்கு உலைவைத்துக் கொண்டிருக்கும் ஜாதிப் பாகுபாட்டை உடைத்தெறிவதற்காக' மைசூர் மகாராஜா கல்லூரியில் படித்துவருபவர்களும், படித்துப் பட்டம் பெற்றவர்களுமான 20 கல்லூரி மாணவர்கள் முன் வந்துள்ளனர். மற்றவர்களையும் தங்கள் கருத்துக்கு ஒத்துழைப்புத் தந்து உதவுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

புதுவகையான இத்திருமணப் போர் அணியில், இன்னும் ஒரு கல்லூரி மாணவியும் சேர்ந்ததாகத் தெரியவில்லை.

கணக்கிற்கு வந்தது... அவ்வளவுதான்!

புதுடில்லி, மார்ச் 11—

இந்தியாவில் வருடத்திற்கு ரூ. 5 லட்சத்திற்கு மேல் வருமானமுள்ளவர்கள் 120 பேர் மட்டுமே இருக்கிறார்கள்; ரூ. 7 லட்சம் வரை வருமானம் பெறுவோர் 74 பேர்; 7 முதல் 10 லட்சம் ரூபாய் வரை 46 பேர்; ரூ. 10 லட்சத்திற்கு மேல் வருமானமுள்ளவர்கள் ஒன்று அல்லது இரண்டு பேர் இருக்கக்கூடும்—என்ற விவரங்களை நிதிமந்திரி தேஷ்முக், ராஜ்ய சபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஷேக் அப்துல்லா

இப்போது காவலில் வைக்கப்பட்டுள்ள காஷ்மீர் முன்னாள் பிரதம மந்திரி ஷேக் அப்துல்லாவின் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ.1,000 'அலவன்ஸ்' தரப்படுவதாக ஜம்மு சட்டசபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'பரிசு பெறத்தக்க வடமொழி நூற்கள் இல்லை'

'ஆங்கிலத்திலும் அதே நிலைதான்'

'தமிழ் இன்பம்' ரூ. 5000 பரிசு பெறுகிறது

பேராசிரியர் சேது (பிள்ளை) விற்குப் பாராட்டு

இந்தியத் துணைக் கண்டத்தில், ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள 14 மொழிகளிலும், 1947 ஆகஸ்ட் 15-லிருந்து, 1954 டிசம்பர் 31-ந் தேதிவரையில் வெளிவந்துள்ள சிறந்த நூற்களுக்கு, ஒவ்வொரு நூலுக்கும் ரூ. 5,000 விதம் இந்தியப் பேரரசு பரிசு வழங்கி இருக்கிறது.

'தமிழ் இன்பம்' (கட்டுரைத் தொகுப்பு) என்ற உரை நடை நூல், பரிசுக்குரிய நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ. 5,000 பரிசு தரப்பட்டிருக்கிறது.

அந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் ரா. பி. சேது(பிள்ளை) அவர்களாவார்.

வெளிவந்துள்ள வடமொழி நூற்களில், ஒன்றுக்காவது பரிசு பெறும் தகுதி இருக்கவில்லை என்று நூற்களை மதிப்பிட்ட சாகித்தியக் கழகம் கருதி, எந்த ஒரு வடமொழி நூலையும் பரிசுக்குச் சிபாரிசு செய்யவில்லை.

இந்தியக் குடிமக்கள் எழுதிய ஆங்கில நூற்களும் பரிசு பெறும் நிலையில் எதுவும் இல்லை என்றும் மேற்படி கழகம் முடிவு கட்டியிருக்கிறது.

சிந்துவில் மீண்டும் நெருக்கடி

குர்ரோ முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டது சட்ட விரோதம்

கராச்சி, மார்ச் 11—

பாக். சிந்து மாநிலத்திற்கு முதன் மந்திரியாக எம். ஏ. குர்ரோ நியமிக்கப்பட்டது சட்ட விரோதமானதென்று சிந்து பிரதம நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருக்கிறது.

நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து, 'சமஷ்டி நீதிமன்றத்தில் அப்பீல் செய்வதற்காக, 10 நாள் அவகாசம் தரப்பட்டிருக்கிறது. தாம் அப்பீல் செய்யப் போவதாக, குர்ரோவும் பின்னர் தெரிவித்திருக்கிறாராம்,

சிந்து சட்டசபை உறுப்பினரும் முன்னாள் முதன் மந்திரியுமான மீர்இலாகி செய்திருந்த மனுவின் பேரிலேயே இன்று தீர்ப்புக் கூறப்பட்டதாம்.

அவரது மனுவில் சர்க்காரிலிருந்து ஊதியம் பெறுவது சம்மந்தமாக குர்ரோவுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க, கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

★

குர்ரோவுக்குப் பதில்?

கராச்சி, மார்ச் 11—

முதன் மந்திரி குர்ரோவின் நியமனம் செல்லாதெனத் தீர்ப்பு வந்ததை ஒட்டி, புது முதன் மந்திரி பற்றிய ஆருடங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இப்போது பாக். மந்திரி சபையில் உள்ள மீர்குலாம் அலிகான் தால்பூர் மீண்டும் சிந்து அரசியலுக்கு திரும்பிவர முயற்சிப்பதாகத் தெரிகிறது.

1953—54-ம் ஆண்டில், இந்தியாவில் மொத்தம் 25 93 லட்சம் டன் வெல்லம் உற்பத்தியாகிறது.

நீலகிரியில் ஒரு கல்லூரி

நீலகிரி மாவட்டத்தில் கல்லூரி ஒன்றை சர்க்கார் இந்த ஆண்டு (ஜூன் முதல்) துவக்குவர் என்று தெரிகிறது.

ஆனால் எந்த இடத்தில் கல்லூரியைத் துவக்குவது என்று இன்னும் முடிவாகவில்லை என்றும் கூறப்படுகிறது

ஆந்திர காங்கிரஸ்காரர்களிடையே பதவிப் போட்டி!

கோபால் ரெட்டி முதல் மந்திரி!

பிரகாசத்தின் கனவு பலிக்காதாம்!

தலைவர் தேர்தலில் மேலிடத் தலையீட்டிற்கு எதிர்ப்பு!

விஜயவாடா, மார்ச் 11—

ஆந்திரத் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியினரிடை, மந்திரிசபை அமைப்பதை ஒட்டி, யார் முதன் மந்திரியாக வருவது என்பதில் பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவிவருகின்றன என்று தெரிகிறது.

பதவி பீடத்தில் அமர காங்கிரஸ் தலைவர்கள் துடித்துக் கிடக்கின்றனராம். பல தலைவர்களின் பெயர்கள், முதன் மந்திரி பதவிக்கு அடிபடுகின்றன.

கலைக்கப்பட்ட மந்திரி சபைத் தலைவராயிருந்த திரு. டி. பிரகாசம், மிக வயோதிகராகிவிட்டதால் இனியும் அவர் தொடர்ந்து முதன் மந்திரியாயிருக்கத் தகுதியற்றவர் என்று கருதப்படுகிறதாம்.

சென்ற பொதுத் தேர்தலில் தோல்வியை அணைத்துக் கொண்ட பி. கோபால ரெட்டி, தமது தோல்விக்குப் பிறகு, ஆந்திர பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவராக மட்டும் பணி புரிந்து வந்தவர், இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். அவர் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று, காங்கிரஸ் கட்சியினரில் பெரும்பான்மையினர் விரும்புகின்றனராம்.

அவர்கூட பத்திரிகையாளரிடம் பேசுகையில், தான் முதன் மந்திரியாக விரும்புவதாயும், கட்சித் தலைவர் தேர்தலில் யாராவது போட்டியிட்டால் எதிர்த்துப் போட்டியிடவும் விரும்புவதாகவும் அவர் கூறியிருக்கிறாராம்.

கட்சித் தலைவரைத் தேர்தெடுத்து நல்லதொரு மந்திரிசபை அமைக்க வேண்டுமென்பதில் காங்கிரஸ்காரர்களிடையே உள்ள கருத்துவேற்றுமைகள் 'மிக ஆழமானவை' என்றும் சொல்லப்படுகின்றன.

ஆந்திராவில் காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள வெற்றி, அகில இந்தியா மட்டுமின்றி, அகில உலக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், காங்கிரஸ் கட்சி மீது மக்கள் தங்களுக்குள்ள விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார்கள்—இந்தத் தேர்தலில் என்றும், மக்களுக்குச் சரிவரப் பணிபுரிய வேண்டிய மகத்தான பொறுப்பு ஆந்திர காங்கிரஸ்காரர்களுக்கு இருப்பதாயும், எனவே, மந்திரிசபை அமைப்பதிலும், இன்னபிற நடவடிக்கைகளிலும் - சொந்தப் போட்டா போட்டிகளுக்கும், சில்லறைத் தகராறுகளுக்கும் ஆந்திர காங்கிரஸ்காரர்கள் தங்களைப் பலியிட்டுக் கொள்வதின் மூலம், காங்கிரஸ் மீது மக்கள் கொண்டுள்ள விசுவாசத்திற்கு உலைவைத்து விடக்கூடாதென்றும், பண்டித நேரு, பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஆந்திரத் தேர்தல் பற்றிய பகுதியில் உபதேசம் செய்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத் தகுந்தாகும்.

பண்டித நேருவின் உபதேசத்தைக் கையிலேந்திக்கொண்டு அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர், செயலாளர்

(4-ம் பக்கம் பார்க்க)

விடுதலை பெறுமுன்பே விடுதலைப் படையில் பிளவு

ஒரே கட்சியின் பெயரால் இரு மாநாடுகள்

கோவா தேசீய காங்கிரசின் போக்கு

பெல்காம், மார்ச் 10—

கோவா விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கும் கோவா தேசீய காங்கிரசின் தலைமைக் காரியாலயம், வரும் ஏப்ரல் 6-ந் தேதியன்று கோவாவில் நடைபெறவிருக்கும் காங்கிரசின் 9-வது வருடாந்திர மாநாட்டிற்கு, திருமதி சுதா மஹதே சாஸ்திரி ஜோஷி என்பவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளது.

ஆனால் இதற்கிடையில், பம்பாயிலுள்ள கோவா தேசீய காங்கிரசில் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து நிற்கும் மற்றொரு கோஷ்டி தாங்கள்தான் கோவா தேசீய காங்கிரசின் உண்மையான பிரதிநிதிகள் என்றும், கட்சியின் 9-வது வருடாந்திர மாநாடு, கோவா எல்லையில், வரும் மார்ச்-20, 21-ந் தேதிகளில் நடைபெறும் என்றும், மாநாட்டிற்கு தலைவராக திருமதி டாக்டர் லாவ்ரா டிசௌசா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாயும் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—3—55 சனி

மூடுமந்திரம் ஏன்?

சென்னை சட்டசபையில் பாசன மூலதன திட்டங்களின் மானியப் பிரேரபணைகளைப் பிரேரித்து மராமத்து இலாகா மந்திரி இராமநாதபுரம் இராஜா அவர்கள் பேசுகையில், சென்னை மாநிலத்தில் சுமார் 98,000 ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, சுமார் 36,000 டன் அதிக உணவு உற்பத்தி செய்யக்கூடிய 8 திட்டங்களுக்கு ரூ. 10 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டு, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, மத்திய அரசாங்க திட்டக் குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, உணவு உற்பத்தியை அதிகமாக்குவதில், சர்க்கார், கடந்த காலத்தில் செய்துள்ள சாதனைகளை விளக்கிக்காட்டி விட்டு, மேலும் தாங்கள் சாதிக்கப் போவதாக இருக்கும் காரியங்களையும் பெருமையுடன் கூறியிருக்கிறார் மந்திரியார்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக, தாங்கள் பத்து கோடி ரூபாய் பெறுமான எட்டு திட்டங்களை சிபாரிசு செய்திருப்பதாகக் கூறி, வரும் ஆண்டில் நீர்ப்பாசன அபிவிருத்திக்காக செலவிடவிருக்கிற தொகையை அனுமதிக்குமாறு கேட்டிருக்கிறார்.

மத்திய அரசாங்க திட்டக் குழு தயாரிக்கும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தாங்கள் சிபாரிசு செய்திருக்கிற பத்து கோடி ரூபாய் பெறுமான அந்த எட்டுத் திட்டங்களும் எவை எவை என்பதை மந்திரியார் சபையில் விளக்கிக் கூறவில்லை.

தாமாகக் கூறுவிட்டாலும், அதுபற்றி விளக்கம் தருமாறு கோரப்பட்டபோதும் மந்திரியார் மழுப்பியிருக்கிறாரே தவிர, நேரான பதில் தரவில்லை.

தாங்கள் சிபாரிசு செய்துள்ள திட்டங்கள் எல்லாம் பரிசிலனையிலிருப்பதாயும், இன்னும் அவை திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதையும் மட்டும் மந்திரி பதிலாகக் கூறியிருக்கிறார்.

அந்தத் திட்டங்களின் விபரங்களைக் கூறுங்கள் என்று கேட்டது கூட, எதிர்க்கட்சியாகிய நமது திராவிட சட்டசபைக் கட்சி உறுப்பினர் அல்ல.

'காங்கிரஸ் ஏழைகளை மறந்துவிட்டது; அவர்களுக்கு வாழ்வு தர மறுத்துவிட்டது; ஆகவே அவர்களை ஆதரிக்காதீர். காங்கிரஸ் வடவருக்குத்தான் வாழ்வு தரும். தென்னவரை மதிக்காது; அவர்களுக்கு வாழ்வு தராது. திராவிடர் வளம் பல பெற்று வாழ திராவிட நாடு தேவை,' என்று மக்களிடம் கூறி வாக்குப் பெற்று சட்டசபைக்குச் சென்று, பின் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் பதவி கிடைக்கிறது என்றதும், மக்களிடை சொன்னதை மறந்து,—மறந்தது மட்டுமல்ல,—'முன்பு காங்கிரசைத் தூற்றினேன் அறிவிழந்து; இப்போது காங்கிரஸ் தான் மக்களுக்கு வாழ்வு தரும் கட்சி என்ற அறிவு பெற்றுவிட்டேன்' என்று, முன்பு கூறியதை மறுத்துக் கூறி, கதர்ச்சட்டையணிந்து தேர்தலில் நின்று, மக்களால் பாடம் கற்பிக்கப்பட்டவர்—அடிக்கடி கட்சி மாறும் அற்புதத் தோழர் இராஜா சிதம்பரம் அவர்கள் தான் கேட்டிருக்கிறார், காங்கிரஸ் கட்சிக்காரர் என்ற முறையில் காங்கிரஸ் மந்திரியான இராமநாதபுரம் இராஜா அவர்களை திட்டங்களின் விபரங்களைத் தருமாறு.

தன் கட்சிக்காரர் கேட்டதற்கே மந்திரியார் மழுப்பியிருக்கிறார். அதன் காரணந்தான் என்ன?

திட்டங்களின் எண்ணிக்கையையும், மதிப்பீட்டுத் தொகையையும்கூறுகிறமந்திரியாருக்கு திட்டங்கள் இவை இவை என்று கூறுவதிலே என்ன கஷ்டமிருக்க முடியும்?

"இன்னின்ன திட்டங்களை சிபாரிசு செய்தோம், திட்டக் குழுவினருக்கு. ஆனால் அவர்களோ, வழக்கம்போல, தென்னாட்டுத் திட்டங்கள்தானே, என்ன அவசரமும் அவசியமும்?" என்று கூறி, சிலவற்றை மட்டுமே கண்துடைப்பிற்காக அங்கீகரித்துவிட்டு இதரவற்றை நிராகரித்துவிட்டனர் என்று பின்னால் கூறவேண்டியிருக்குமே என்ற அச்சத்தினால்தானே இப்போது மந்திரியார், சிபாரிசு செய்யப்பட்ட திட்டங்கள் இவை என்று கூற மறுத்திருக்கிறார்—மழுப்பியிருக்கிறார்.

இப்படி மழுப்பி, தமது வடநாட்டு எஜமானர்களின் வேஷம் கலையாது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார் போலும்.

இல்லாவிட்டால் அந்த எண்ணத்தைத் தவிர, வேறு எந்தக் காரணத்தால் திட்டங்களின் விபரங்களைத் தராது மழுப்பியிருக்க முடியும்? ஏன் இந்த மூடு மந்திரம்?

காங்கிரசுடன் இணையவில்லையாம்!

பார்வர்ட் பிளாக் கட்சிச் செயலாளர் மறுப்பு

சிந்த்வாரா, மார்ச் 10—

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சிச் செயலாளரான ஹல்துல்கார் என்பவர், 'பார்வர்டு பிளாக் கட்சி காங்கிரசுடன் இணைந்துவிட முடிவாகியுள்ளது,' என்று வெளியான செய்தியை மறுத்திருக்கிறார்.

ஜெனரல் மோகன்சிங், ஷீல் பத்ரயாஜி என்ற இருவரும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் என்றும், அவர்களின் இந்த தந்திரங்களினால் நாடெங்குமுள்ள (!) கட்சித் தோழர்களும், பொது மக்களும் ஏமாந்துவிடக்கூடாதென்றும் அவர் எச்சரித்துள்ளாராம்

'ஹோலி' திருவிளையாடல்!

செய்வதறியாமல் செய்ததின் விபரீத விளைவு!

கல்கத்தா, கதிகர் பகுதியில் உள்ள இரு வியாபாரிகள், 'ஹோலி' விளையாட்டுகளில், மிக விபரீதமான ஒரு அனுபவம் பெற்றனர் என்று செய்திகள் வந்துள்ளன.

தங்கள் கடைக்கு வந்து சாமான் வாங்குபவர்கள் மீதெல்லாம் சிவப்புச் சாயப் பவுடரைத் தூவி மகிழ்ச்சி கொண்டாடியிருக்கின்றனர் — வழக்கமான 'ஹோலி' பண்டிகையின் போது!

அருகில் உள்ள மலைப் பிரதேசத்திலிருந்து 'சாந்தால்' என்ற வகுப்பைச் சேர்ந்த 6 பெண்கள் சாமான் வாங்க இந்த வியாபாரிகளிடம் வந்தனர். அப்போது வியாபாரிகள், முன்யோசனையின்றி, எல்லோரையும் போலவே இந்தப் பெண்களையும் நினைத்து, அவர்கள் முகத்தில் சாயப்பவுடரைத் தூவினராம்.

வேதனை முகிழ்ந்தது; மகிழ்ச்சி மறைந்தது; விம்மினர்; விக்கினர் வீறிட்டு அழுதனர் அந்தப் பெண்கள்—கண்ணீர் சொரிய! அவர்களை யாராலும் ஆறுதல் செய்ய முடியவில்லை.

கூட்டம் கூடிவிட்டது; அழுது கொண்டே, பெண்கள், நடந்ததைக் கூறினர்.

சாந்தால்' வகுப்பினர் வழக்கப்படி, பெண்கள்மீது அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள்தான் சிவப்புச் சாயப் பவுடர் பூச முடியும்; ஆனால், இப்போது, யாரோ இனந் தெரியாத இரு வியாபாரிகள் பவுடரைப் பூசிவிட்டனர்; அதனால் இனி எந்த 'சாந்தால்' வகுப்பைச் சேர்ந்த இளைஞரும் அவர்களை மணந்து கொள்ள முன்வரமாட்டார்கள்!

ஆனால் அவர்கள் நியாயமாகக் கோரினராம்—தங்களை அந்தத் துன்பத்திற்கு ஆளாக்கிய அந்த வியாபாரிகளே அந்த பெண்களை, ஆளுக்கு மூன்று பேர்களாக மணந்து கொள்ளலாம்—என்று!

ஆனால், இந்தத் தொந்தரவை வியாபாரிகள் ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கவில்லையாம்! அப்போது, அந்தப் பெண்கள் சிந்தித்துக் கொண்டிருக்கையில், வியாபாரிகள் இருவரும் அழுது கொண்டிருந்தனராம்!

பின்பு, இந்தப் பெண்கள், போலீசாரிடம் புகார் செய்தனராம்!

போலீசார், அந்த வியாபாரிகள் இருவரையும் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

வரிப் பணத்தை மோசடி செய்ததாக!

நகரசபை உறுப்பினர் மீது குற்றச்சாட்டு

சாங்லி புகைவண்டி நிலையத்தில் வசூலிக்கப்பட்ட நகரச் சுங்க வரியை. மோசடி செய்ததாக ஒரு நகரசபை அங்கத்தினர் மீது குற்றஞ் சுமத்தப்படுகிறது.

அந்த உறுப்பினர், 'வரி வசூலிப்போன்' என்ற முறையில், புகைவண்டி நிலையத்திற்கு வரும் வண்டிகளுக்கெல்லாம் விதிக்கப்படும் நகரச் சுங்க வரியை விதித்து, அந்தத் தொகையைச் சொந்தமாகச் செலவிட்டுக் கொண்டார் என்று வேறு இரண்டு உறுப்பினர்கள் நகரசபைத் தலைவருக்கு புகார் அனுப்பியுள்ளனர் என்று தெரிகிறது.

தலைவர், தாங்கள் அனுப்பிய புகாரை சரியாக விசாரிக்காது போகவே, அவர்கள், சாங்லி கலெக்டருக்கு மனுச் செய்து விசாரிக்கக் கோரியுள்ளனராம்.

சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் நகரசபை அலுவலகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாயும் புகார் கூறப்படுகிறது.

உள்நாட்டுப் போர்?

பாரிஸ், மார்ச் 11—

தன்னை எதிர்க்கும் மூன்று மதப் பிரிவினர்களின் படைகளை ஒடுக்குவதற்காக, யுத்தத்தில் அரசாங்க இராணுவம் முழுவதையும் தெற்கு வியட்நாம் பிரதமர் ஙீகோ - தின் - தியம் ஈடுபடுத்தியிருப்பதாக பாரிஸ் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளதாம்.

தியம் மந்திரி சபையை விலக்க வேண்டும் என்று இம்மூன்று வகுப்பினர்களும் சென்ற வெள்ளியன்று கோரினர்; பிரான்சில் உள்ள மன்னர் பாவோ - டாய் நாடு திரும்பி ஏதேச்சாதிகார ஆட்சி நடத்த வேண்டும் என்பது இவர்கள் விருப்பம். பாவோ - டாயைச் சந்திக்க இரு தூதர்களை இவர்கள் நேற்று பாரிசுக்கு அனுப்பியுள்ளனராம்.

இந்த மதப் பிரிவினர்களிடம் மொத்தம் 25,000 சொந்தச் சிப்பாய்கள் இருக்கிறார்கள்.

பிரபல தேசியவாதியெனக் கருதப்படும் ஙீகோ-தின்-தியமுக்கு பலத்த அமெரிக்க ஆதரவு உண்டாம்.

காதல் கடிதம் தந்த பரிசு!

திருவனந்தபுரம், மார்ச் 10—

காதல் கடிதம் ஒன்று, ஒரு கிராமத்தை இருகூறுகளாக்கி, பயங்கர ஆயுதங்களைக்கொண்டு தாக்கிக் கொள்ளுகிற நிலையை உருவாக்கியது பற்றிய சம்பவம் அறிய வந்துள்ளது.

போலீசார் நிலையைச் சீர்செய்ய ஆயுதந் தரித்த போலீசாரின் உதவியை நாடி, அமைதி ஏற்படுத்தியிருக்கின்றனர்.

ஆறும் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் ஒரு பையன், மூன்றாம் வகுப்பில் படிக்கும் பெண் ஒருத்திக்கு, கடிதம் ஒன்று தீட்டி, தனது அளவுகடந்த காதலை வெளியிட்டிருந்தானாம்.

ஆனால் கடிதம் அந்தக் 'காதலி' யின் கையில் கிடைக்குமுன் காதலியின் பெற்றோர் கையில் சிக்கி அவர்களுக்கு சீற்றத்தை மூட்டிய தாம் விளைவு, அவர்கள், தங்கள் பெண்ணின் காதலனை அந்த ஆறும் வகுப்புப் பையனை வழிமறித்து கையைப் புடைத்தது மட்டுமின்றி அவனது உறவினர்களையும் நன்றாகத் தாக்கினராம்.

உடன் அந்த கிராமத்து மக்கள், காதலன், காதலி ஆகிய இரு கோஷ்டிகளாகப் பிரிந்து சண்டையைத் துவக்கியிருக்கின்றனர்.

சண்டையைக் கண்ட போலீசாரால், நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடவே அவர்கள் வேறு போலீசாரைக் கூப்பிட்டிருக்கிறார்கள்.

இப்போது கிராமத்தை ஆயுதந் தரித்த போலீசார் ரோந்து வருகின்றனராம், பாதுகாப்பிற்காக.

இந்தச் சம்பவம், இங்கிருந்து 12 மைல் தொலைவில் உள்ள நேமம் எனும் கிராமத்தில் நடைபெற்றுள்ளதாம்.

ஏற்பட்ட அடிதடியினால் அந்த காதலன் உட்பட நால்வர் மருத்துவ மனையிலிருக்கிறார்களாம்.

இனி என்ன குறைச்சல்?

புதுடில்லி, மார்ச் 10—

எல்லா மாவட்டங்களிலும், தாலுகாக்களிலும், கர்ப்பத்தடைத் திட்டங்களை விரிவாக்குவது பற்றி சர்க்கார் யோசித்து வருவதாக சுகாதார மந்திரி அமிர்தகௌரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறாராம்.

ஹெலன் கெல்லருக்கு நகரசபை வரவேற்பு

கண்ணிழந்தோர் தன்னம்பிக்கை கொள்ள உதவ வேண்டுகோள்

சென்னை, மார்ச் 11—

"அந்தகர்கள் (குருடர்கள்) பிறரையே நம்பியிருக்கும் நிலைமை மாறி, தன்னம்பிக்கையும் சுய உதவியும் பெற எல்லோரும் உதவி அளிக்க வேண்டும்,"

என்று அமெரிக்க குருடு, செவிடு நிபுணரான திருமதி ஹெலன் கெல்லர், சென்னை நகரசபைக் கட்டிடத்தில், மேயர் எம். ஏ. சிதம்பரம் தனக்களித்த வரவேற்பின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேயர் திரு. சிதம்பரம் பேசுகையில், இந்நாட்டில் சுமார் 20 லட்சம் குருடர்கள் இருப்பதாகவும், அவர்களில் பெரும்பான்மையோர் கல்வியறிவுபெற வசதி இல்லாமலிருப்பதுடன், ஆதரவேதுமற்ற அனாதைகளாக இருந்து வாழவேண்டிய அவல நிலையில் அவர்கள் இருந்து வருவதாகவும், அவர்களில் அனேகர் நோயின் காரணமாகவோ அல்லது விபத்துக்களின் காரணமாகவோ கண் பார்வை இழந்துவிட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

சென்னை மாநிலத்தில் குடிநீர் வசதி

திட்டங்கள் பற்றிய விபரம்

சென்னை, மார்ச் 10—

மங்களூர், திண்டுக்கல், மேலப்பாளையம் முதலிய நகரங்களுக்குக் குடிதண்ணீர் வினியோகிக்கவும், சென்னை, மதுரை, கோவை, திருநெல்வேலி முதலிய நகரங்களில் இப்பொழுதுள்ள குடிதண்ணீர் வசதியை அபிவிருத்தி செய்யவும் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் ரூ. 2½ கோடி செலவில் நிறைவேற்றப்படும் என்றும், இத்திட்டங்கள் சம்பந்தமான வேலை இந்த ஆண்டில் ஆரம்பமாகும் என்றும், சென்னை பொது மராமத்து இலாகா பிரதம எஞ்சினியர் திரு. அனந்தராவ் இன்று மாலை பொறியியற் கல்லூரியில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், ரூ. 50 லட்சம் செலவில் கிராமாந்திர குடிதண்ணீர் வசதி திட்டங்களை நிறைவேற்றும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், கும்பகோணம், திருச்சி முதலிய நகரங்களில் சாக்கடைத் திட்டங்களும் நிறைவேற்றப்படுமென்றும், மற்றும் சில நகரங்களில் உள்ள சாக்கடை வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுமென்றும் கூறினார்.

ரூ. 10 கோடி செலவில் பாசனத் திட்டங்கள்!

சென்னை, மார்ச் 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் எட்டு பாசனத் திட்டங்களைச் சேர்க்க சென்னை சர்க்கார் எண்ணியுள்ளது.

பல மாவட்டங்களில் பரவலாக வரும் இத்திட்டங்களுக்கு பத்து கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமாம்.

இதனால் 93,000 ஏக்கர் நிலம் பயனடைவதோடு, 36,000 டன் அதிக உணவும் உற்பத்தியாகுமாம்.

இன்று சட்டசபையில் நீர்ப்பாசனம், பாசன மூலதன திட்டங்களின் மானியக் கோரிக்கையை பிரரேபித்துப் பேசுகையில், மராமத்திலாகா அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மேலும் 1947 — 48-லிருந்து இவ்வாண்டு வரை பாசன மூலதன திட்டங்களுக்காக 30 கோடி ரூபாய் செலவாகி இருப்பதாக அறிவித்தார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் புள்ளம்பாடி திட்டமும் ஒன்றாகும் என்று அமைச்சர் அறிவித்தார்.

சென்னை சட்டசபையில்....

★

எப்போது முடியுமோ இந்த பரிசீலனை?

பீடி, சுருட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கும் பிரச்சினை சர்க்கார் பரிசீலனையிலிருந்துவருவதாகவும், இதற்காக மத்திய அரசாங்கம் நிரந்தர நிறுவனம் ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது என்றும், அதுபற்றி முடிவு செய்யும்வரை மாநில சர்க்கார் நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், அமைச்சர் பக்தவத்சலம் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பரவாயில்லையே!

'சேலத்தில் உற்பத்தியாகும் சவ்வரிசி உண்மையான சவ்வரிசி அல்ல,' என்று கூறி, கல்கத்தா நகரசபை 20 ஆயிரம் டன் சவ்வரிசியைக் கைப்பற்றி முடக்கியதை ஒட்டி எழுந்துள்ள பிரச்சினை குறித்து அண்மையில் புதுடில்லி சென்றிருந்த காமராசர், மேற்குவங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராயுடன் விவாதித்ததாயும், அதுபற்றி அனுப்பப்படும் பொதுக் குழுவின் கோரிக்கைகளை சாதகமாகக் கவனிப்பதாக பி சி. ராய் கூறியிருப்பதாயும் விவசாய மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

சேலத்தில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து உற்பத்தியாகும் சவ்வரிசித் தொழிலைப் பாதுகாக்க சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாயும் அவர் கூறியிருக்கிறார்.

'சேலம், கோழிக்கோடு மார்க்கெட்டுகளில் மரவள்ளி—அதன் பொருள்களின் விலை சரிந்துவிட்டது,' என்று, மாநில மார்க்கெட் அதிகாரிக்கு 'ரெவின்யூ போர்ட்ட'யிருந்து தகவல் வந்தது. விலைச் சரிவிற்குக் காரணம், வட இந்தியாவில் இவை வாங்கப்படுவது குறைந்ததுதான் என்றும், ரயில் வாகன் வசதிகள் சரிவரக் கிடைக்கவில்லை என்றும் மந்திரி, சபையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்த நெருக்கடிகளைப் போக்க இவ்வாண்டில், மரவள்ளி—அதன் பொருள்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்படி மத்திய அரசாங்கத்திற்கு சென்னை சர்க்கார் சிபாரிசு செய்துள்ளது என்றும், இவை வாங்கக்கூடிய இடங்களுக்கு குறைந்த கட்டணத்தில் அதிக இரயில்வே வாகன்களைத் தரவேண்டும் என்றும் கோரப்பட்டிருப்பதாயும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

தஞ்சையில் கல்லூரி

தஞ்சையில் ஒரு முதல்தரக் கல்லூரியை நிறுவ ரூ. 5 லட்சம் நிதியமைப்பதற்கு மாவட்டக் கழகத்திடமுள்ள சத்திரம் நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்ய வரும் ஏப்ரலில் சர்க்கார் ஒரு மசோதா கொண்டு வரும் என்று கல்வி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

தொத்து நோய்

சென்னையில், பிறந்து மூன்றே நாட்களான ஒரு குழந்தைக்கு பெரியம்மை நோய் கண்டது என்றும், அது வைத்திய உலகில் பெரும் ஆச்சரியத்தை உண்டாக்கியது என்றும் சுகாதார மந்திரி தெரிவித்திருக்கிறார்.

பிரசவத்திற்கு முன்போ, பின்னரோ குழந்தையின் தாய்க்கு அந்த நோய் ஏற்படவில்லை என்றும், இதுபற்றி கிண்டியில் உள்ள 'கிங் இன்ஸ்டிடியூட்' சோதனை நடத்தியது உண்மைதான் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

குற்ற பரம்பரையினருக்கே!

"தஞ்சை, திருச்சி, சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் வன்னிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு முழுச் சம்பள வஜா சலுகைகாட்டி, அரசாங்கம் உத்தரவிட்டிருப்பது, அந்த மாவட்டங்களில் உள்ள 'குற்ற பரம்பரை' வகுப்பினருக்கு மட்டும்தான்," என்று கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

"குற்றபரம்பரையினர் படையாச்சி என்று குறிப்பிடப்பட்டால், அவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது" என்று கூறினார் மந்திரி.

"இதர பிற்பட்ட வகுப்பினருக்கு பாதிச் சம்பள சலுகை உண்டு," என்றும் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

பரிசீலனை

பாரம்பரிய கிராமாதிகாரிகள் முறையை ரத்து செய்வது அரசாங்கத்தின் பரிசீலனையிலிருப்பதாக கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் ரெவின்யூ மந்திரி கூறியிருக்கிறார்.

வடபாதிமங்கலத்தில் சர்க்கரை ஆலை

"சர்க்கரை ஆலைகள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டதை ஒட்டி, தஞ்சை, மன்னார்குடி வட்டம் வடபாதிமங்கலத்தில், விரைவிலேயே ஒரு சர்க்கரை ஆலை துவங்கப்படும்," என்று விவசாய மந்திரி கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"இம்மாதிரி ஆலை ஏற்படுத்தி கரும்பு உற்பத்தியை ஊக்குவிப்பது, தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தியாவதை பாதிக்காதா?" என்று கேட்கப்பட்ட போது, "தஞ்சையில் 13 லட்சம் ஏகரா நிலத்தில் நெல் சாகுபடியும், 2000-ஏகராவில் கரும்பும் சாகுபடியாகிறது; கரும்பு சாகுபடி 4 ஆயிரம் ஏகராவில் ஆனாலும், அது, நெல் உற்பத்தியைப் பாதிக்காது" என்றும் மந்திரி பதிலளித்திருக்கிறார்.

5 ஆண்டுகளில் 5 லட்சம் பேருக்கு இராணுவப் பயிற்சி

இந்திய சர்க்கார் திட்டம்

பூனா, மார்ச் 10—

அடுத்த 5 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் 5 இலட்சம் பேருக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்து திட்டம் தயாரித்துள்ளதென்றும், அடுத்த மாதம் முதல் இத்திட்டம் அமுலுக்கு வருமெனவும் அறிவிக்கப்படுகிறது.

'தேசியத் தொண்டர் படை' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட இருக்கும் இத்திட்டத்தின்கீழ், முதலாண்டில் ஒரு இலட்சம் பேருக்கு இராணுவப் பயிற்சி தரப்படுமாம். இதற்கென நாடு முழுமையிலும் சுமார் 200 முகாம்கள் ஏற்படுத்தப்படுமெனவும், இப்பயிற்சி 1 மாத காலம் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் தொட்டு அடுத்த ஆண்டு மார்ச் திங்கள் வரை, தென்பகுதியில் 82 இராணுவப் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப்படுமெனவும், ஒரே நேரத்தில் ஒவ்வொரு முகாமிலும் 500 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுமெனவும், அவர்களுக்கு உடற்பயிற்சி, நிலப்பட போதனை, தற்கால பிரச்சினைகள், பொது அறிவு போன்ற பலவற்றிலும் பயிற்சி தரப்படுமெனவும் தெரியவருகிறது.

இந்த இராணுவ முகாம்கள் பெரும்பாலாக தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பிரதேசங்களில்தான் அமைக்கப்படுமாம். மேற்படி பயிற்சிக்கு 18 முதல் 35 வரை வயதுள்ள எல்லா ஆண்களும் சேர்த்துக்கொள்ளப்படுவராம்.

மக்களிடையே கட்டுப்பாடு, தோழமை உணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துவதுதான் இம்முகாம்கள் அமைக்கப்படுவதின் நோக்கம் என்றும் கூறப்படுகிறது.

மக்கள் சபை உறுப்பினர்கள் பெரும்பான்மையினர், 'மக்களுக்கு ஏதாவது ஒருவிதமான இராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும்' என வெகுநாட்களாகவே சபையில்கேட்டுக் கொண்டதற்கிணங்க, சென்ற ஆண்டில், துணை இராணுவப் பயிற்சிப் படை (ஆக்சிலரி பயிற்சிப் படை) ஆரம்பிக்கப்பட்டதென்றும், அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஒரு வார காலத்திற்குத்தான் பயிற்சி அளிக்கப்படுவதால், அது மிகக் குறுகிய காலம் என்று கருதப்பட்டதென்றும், எனவேதான் அக்காலவரையறையை ஒரு மாதமாக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கழகச் செய்திகள்

சோழவந்தான் தி. மு. க.

27—2—55 இரவு 8 மணிக்கு தோழர் கா. சு. செல்லச்சாமி தலைமையில் அண்ணா படிப்பகத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர்கள் எம். எஸ். பெரியசாமி, கண்ணதாசன் தந்தையார், இவ்வூர் தோழர் வெ. வீரப்பன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்ட பின்னர், கழகச் சார்பில் இங்கு ஒரு சொற்பயிற்சி மன்றம் ஏற்படுத்துவதெனவும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள செயலாளருக்கு அனுமதி அளித்தும், 27—3—55 காலை 10 மணியளவில் உறவின்முறை பொதுப் பேட்டையில் கிளைக் கழகத் தேர்தல் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்ட பின்னர், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களின் கூட்ட வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகம்

3—3—55 இரவு 8-15 மணியளவில், 'திராவிடரகத்தில்,' தோழர் பி. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்ற கழகச்செயற்குழுக் கூட்டத்தில், 20—3—55ல் 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்' தாராவி வ. உ. சி. திடலில் கொண்டாடுவதெனவும், ப தி. மு. க. சார்பில் சொற்பயிற்சிக் கூட்டங்கள் நடத்துவதெனவும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை செயலாளரிடம் ஒப்படைத்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பாண்டுப் தி. மு. கழகம்

3—3—55 மாலை 7 மணியளவில் தோழர் பென்னியமேன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வி. தேவதாசன்; துணைச் செயலாளர்: டி. ஏகாம்பரம்; பொருளாளர்: எம். ஈசாக்கு. செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். விசுவநாதன், எம். டேவிட், எம். வி. மணி, ஆர். தாசன், பி. வி. பென்னியமேன், எம். எஸ். தாமஸ், ஏ. ராஜேந்திரன், கா. சு. சேதுராமன்.

ஆக்க வேலைக்கு அணுசக்தி ஆராய்ச்சி

சென்னை, மார்ச் 10—

"சென்னை பல்கலைக் கழகத்தில் ஆக்க வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றிய ஆராய்ச்சிக்கு வசதி செய்ய வேண்டும்," என்று திரு பி. பானல், சென்னை பல்கலைக் கழக செனட் சபை 15-ந் தேதி கூடும்போது ஒரு பிரேரேபணை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

1957-ல் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா சமயத்தில் ஆராய்ச்சியின் முதல் கட்டம் துவங்குவதற்கு வழிசெய்யவேண்டுமென 'சிண்டிகேட்'டைக் கோரும் அம்சமும் அப் பிரரேபணையில் இடம் பெற்றுள்ளது.

கோவில்பட்டி தி. மு. கழகம்

2—3—55 இரவு 8-30 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் சு. சி. வயலரசன் தலைமையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில், வருகிற ஏப்ரல் திங்கள் முடிவிற்குள் இவ்வூரில் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய்–தானா தி. மு. கழகக் கிளை

3—3—55 மாலை 7 மணி அளவில், தோழர் வைதீக சங்கரன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், விரைவில் கழக ஆண்டு விழாவை நடத்துவது என்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மயில்ரங்கம் தி. மு. கழக ஆண்டுவிழா

5—3—55 மாலை 7 மணியளவில், பாண்டியனார் திடலில், கழக ஆண்டுவிழா தோழர் சீரங்கராயர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சக்கரை, வேலுசாமி, கலைமணி, ஈரோடு எஸ். அப்பாவு, மேடைவலசு, சிதம்பரனார் ஆகியோர் கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினர். பின்னர் தோழர் என். வி. நடராசன் சமுதாய நிலை குறித்தும், அரசியல் நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

சேலம் நகர தி. மு. கழகம்

5—3—55ல், தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், 20—3—55ல் 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்' பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், நகரிலுள்ள வட்டாரக் கிளைகளின் தேர்தல் 20—3—55 முதல் 27—3—55 வரை நடத்துவதென்றும், நகரக் கிளை தேர்தல் 27—3—55ல் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

எடத்தெரு (திருச்சி) தி. மு. கழக 2-ம் ஆண்டுவிழா

6—3—55 மாலை 6 மணிக்கு நடைபெற்ற மேற்படி விழாவில் தோழர் தொ. பா. கோபாலகிருஷ்ணன் கழக இரண்டாவது ஆண்டு அறிக்கை வாசித்தார். விழாவிற்கு தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமை தாங்கினார். தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், எம். எஸ் மணி, மதிவாணன் ஆகியோர் இன்றைய அரசியல் நிலை பற்றி சொற்பொழிவாற்றினர். எதிர்பாராதவிதமாக தோழர் இரா. நெடுஞ்செழியனும் கலந்துகொண்டார்.

கள்ளிப்பாளையத்தில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

6—3—55 மாலை 6 மணிக்கு, சேலம் கொய்யலுக்கடுத்துள்ள கள்ளிப்பாளையத்தில் தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் வி. ஏ. ராமநாதன், வி. கே இராசு ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் சமுதாய நிலை குறித்தும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

* * *

பெயர் சூட்டல்

கூட்டத்தில் தோழர் காளியப்பன் ஆண்குழந்தைக்கு தோழியர் சத்தியவாணிமுத்து 'மதிவாணன்' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மாப்படுகை தி. மு. கழக 3-வது ஆண்டுவிழா

6—3—55 மாலை 6 மணிக்கு, வெட்டாற்று மணற் பரப்பில், தோழர் கே. இராமையா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் டி. ஏ. இராமசாமி, கல்யாணம் ஆகியோரின் இன்னிசைக்குப்பின், தோழர்கள் என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மல்லம்பாளையத்தில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

6—3—55 மாலை 7 மணிக்கு, தாரைவட்டம் மல்லம்பாளையத்தில் பகவதி அம்மன் கோவில் திடலில், கழகச் சார்பில், தோழர் எம். எம். முத்துசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சக்கரை, பொன்னப்பா, சின்னமுத்துசாமி, கே. எஸ். சீரங்கராயர், அன்புக்கரசு ஆகியோர் கழக நிலை குறித்துப் பேசியபின்னர், ஈரோடு தோழர் எஸ். அப்பாவு சமுதாய நிலை குறித்தும், அரசியல் நிலை குறித்தும், சொற்பொழிவாற்றினார். இறுதியில் தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் சமுதாயத்தில் கடவுள், புராணங்கள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

அருப்புக்கோட்டை தி.மு. கழகம்

6—3—55 இரவு 10 மணிக்கு கழக அலுவலகத்தில், தோழர் சு. நடராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், விருதை தோழர் எம். எஸ். பெரியசாமி, தோழர் கண்ணதாசனின் தந்தையார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மேட்டூர் (அணை) தி. மு. கழகம்

7—3—55ல், தோழர் க. கு. சின்னசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், 28—3—55ல், கழக உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவதென்றும், அக்கூட்டத்தில், கழகத் தேர்தல், ஏப்ரல் மாதம் நடத்தவிருக்கும் பொதுக்கூட்டம் ஆகியவை பற்றி முடிவு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சேதவத்தை — இலங்கை தி. மு. கழகம் (கிளை)

6—3—55ல், தோழர் பி. என். சேரன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழக முதலாவது ஆண்டுவிழா வரவு—செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், இலங்கையிலிருக்கும் இந்தியப் பிரதிநிதி ஒரு தமிழராக இருக்கவேண்டுமென்று சர்க்காரை பலமுறை கேட்டிருந்தும், தற்போது தமிழரல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும், சட்டக் கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததைக் கண்டித்தும், தோழர் கண்ணதாசனின் தந்தையார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர்-இலக்குமணபுரி தி. மு. கழகம்

6—3—55 காலை 10 மணிக்கு, கழக மனையில் தோழர் எம். கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 20–3–55 காலை 11 மணிக்கு கழக மனைக்கு எதிரிலுள்ள மைதானத்தில் 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்' பொதுக் கூட்டமும், 13–3–55ல் கழக நிர்வாகக் குழுத் தேர்தலும், அடுத்த மாதம் 10-ந் தேதி பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்ட பின்னர், கடந்த ஆண்டு வரவு—செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

‘தினத் தந்தி’யின் அயோக்யத்தனமா? நிருபரின் அயோக்யத்தனமா?

சி. பி. சிற்றரசு பேசினது என்ன?

புதுவை, மார்ச் 12—

“‘தினத் தந்தி’ (சென்னை 11—3—55 வெள்ளி) இதழின் முன் பக்கத்தில், ‘குபேர் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும்!’ என்ற தலைப்பில், புதுவை முதலியார் பேட்டைத் தி. மு. கழக திறப்பு விழாவில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசியுள்ளதாக வந்துள்ள செய்திகள் அனைத்தும் முற்றும்பொய்!

“அச் செய்திகள், அங்கு பேசப் படாததும், எங்கள் நோக்கத்திற்கு மாறுபட்டதுமாகும். இந்த அயோக்கியத்தனம், ‘தினத் தந்தி’யினுடையதா? அதன் நிருபருடையதா? என்பதும் விளங்கவில்லை.

“6—3—55 மாலை, புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், ‘திராவிடம் ஏன் பிரியவேண்டும்?’ என்ற தலைப்பில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுகையில், ‘வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சி நம்மை விட்டுத் தொலையவேண்டும்; திராவிடம் தனியாகப் பிரியவேண்டும்; அதை நாங்களே ஆளவேண்டும் என்றுகூட விரும்பவில்லை—தோழர் காமராசர் ஆளட்டும்—எங்கட்கு கவலை யில்லை; இவ் ஆர் சுப்பையா (கம்யூனிஸ்டு கட்சி) ஆளட்டும்—நாங்கள் ஆட்சேபிக்கவில்லை; தோழர் குபேர்—இப்பொழுது இ. ஜி. பிள்ளை என்று பெயர் மாற்றியிருக்கிறாரே, அவர் ஆளட்டும்—எங்கட்குக் கவலையில்லை. ஆனால், வடவர் நம்மை ஆளக் கூடாது! நேவல்சிங் நம்மை ஆள்வது கேவலம்!” என்றார். இக் கருத்தைத்தான் ‘தினத்தந்தித்தனம்’ செய்திருக்கிறார்கள் போலும்!

“முதலியார்பேட்டை தி. மு. கழகம், அவ்வூர் மேயர் முயற்சியால் நடைபெற்றதென்பதும் சுத்தப் பொய்! மேயர் அவர்கள் முனிசிபாலிடி இடத்தில் கழகக் கொடி ஏற்ற இருந்ததையும் தடுத்துவிட்டவர். (உடன் லோக்கல் இடத்தில் அக்கொடி ஏற்றப்பட்டது.)

“இதனால், புதுவை பொது மக்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது யாதெனில், எங்கள் தி. மு. கழகம் தனித்து இயங்கக் கூடியது; பிறகட்சிகளின் தொடர்போ—கூட்டுறவோ பெற்றுத்தான் வளரவேண்டுமென்ற அவசியத்திலில்லை. ஆகவே, ‘தினத் தந்தி’, ‘தினமணி’ போன்ற—செய்திகளைத் திரித்தும், புனைந்தும் கூறும்-பத்திரிகைச் செய்திகளைக் கண்டு யாரும் ஏமாற வேண்டாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.”

இவ்வாறு புதுவை தி. மு. கழகச் செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் அறிவிப்பு விடுத்துள்ளார்

கழகக் கூட்டங்கள்

★

திருவெண்காடு

தி. மு. கழக 3-வது ஆண்டு விழா

தேரடியில்

14—3—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

சிங்கிபுரம்

சந்தைப்பேட்டை மைதானத்தில்

14—3—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: எஸ். கே. பழனிமுத்து

பேசுவோர்:

சத்தியவாணிமுத்து
எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

வடக்குமாங்குடி (தெ. ஆ.)

15—3—55 மாலை 6 மணிசகு

தலைவர்: பூராசாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
ஆர். பாலகுருசாமி
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

சென்னை 43-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

14—3—55 இரவு 8 மணிக்கு, சென்னை 43-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். பரிசீலனைக்கு வருபவை: கழக வரவு-செலவு கணக்கு, 4-ம் ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு, மற்றும் சில.

சிறப்புச் சொற்பொழிவு

(தி. மு. கழக தலைமை நிலைய அனுமதி பெற்றது)

தோழர்கள் ★

என். வி. நடராசன்
—‘சிதம்பர இரகசியம்’

ஏ.வி.பி. ஆசைத்தம்பி
—‘கடவுள் எங்கே?’

டி. கே. சீனிவாசன்
—‘இலட்சியப் பாதையில் நாம்’

13-3-55 ஞாயிறு காலை 9 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்

நன்கொடை: அணா 8; அணா 4

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

சர்ச்சில் மீது கண்டனத் தீர்மானம்

இந்திய ஜவுளி இறக்குமதியின் எதிரொலி!

லண்டன், மார்ச் 10—

“லங்காஷயர் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பரிகாரம் ஒன்றையும் அரசாங்கம் தேடவில்லை,”

என்று, பிரிட்டிஷ் சர்க்கார் மீது கண்டனப் பிரேரபனை ஒன்றை பிரிட்டிஷ் சர்க்கார் முன்னாள் வர்த்தக அமைச்சரும், தொழிற் கட்சி உறுப்பினருமான வில்சன் கொண்டுவந்தார்.

இதை மறுத்து சர்க்கார் தரப்பிலும் ஒரு திருத்தம் பிரேரபிக்கப் பட்டது.

வில்சன் கொண்டுவந்த கண்டனப் பிரேரபனைக்கு ஆதரவாக 255 ஓட்டுகளும், எதிராக 283 ஓட்டுகளும் கிடைக்கப் பெற்று கண்டனத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

இந்திய ஆலைகளுக்கு மலிவான ‘கண்ட்ரோல்’ விலைக்குப் பருத்தி கிடைப்பதாகவும், லங்காஷயர் ஆலைகளுக்கு அதிக விலையிலேயே பருத்தி கிடைப்பதாகவும், இதனால் இந்தியத் துணிகள் லங்காஷயருடன் போட்டியிடுவதாகவும் வில்சன் குற்றம் சாட்டினார்.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய வர்த்தக அமைச்சர், இந்தியத் துணி ஏற்றுமதிக்கு இந்திய சர்க்கார் மானியம் தந்து வருவதாகக் கூறுவது ஆதாரமற்ற வாதமேயாகுமென்றும், தானே உற்பத்தி செய்யும் பருத்தியை தன் ஆலைகளுக்கு, உலக விலையைவிடக் குறைவான விலையில் இந்தியா விநியோகம் செய்வதென்பதில் எவ்விதத் தவறும் கிடையாதென்றும், இதை ‘மானியம்’ என்று கூறினால், பலவிதமான விளைவுகள் நேரிடும் என்றும் பதிலுரைத்தார்.

மேலும் அவர், இதற்கென பதில் நடவடிக்கைகள் ஏதும் எடுப்பதினால் தங்களது எஞ்சினியரிங் பண்டங்களின் ஏற்றுமதி பாதிக்கப் படக்கூடுமென்றும், ஏனெனில், உலக விலையைவிட மிகக் குறைவான விலையிலேதான் தாங்களும் இரும்பு, நிலக்கரியை இத்தொழிலுக்கு விநியோகித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஆந்திர காங்கிரஸ்காரர்களிடையே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கே. பி. மாதவன் நாயர், மற்றும் பம்பாய் எஸ். கே. பட்டீல், இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி ஆகியோர் இங்கு பறந்து வந்து, ஆந்திர காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பல கோஷ்டியினரையும் சந்தித்து உரையாடி, சமரசம் காண முற்பட்டிருக்கின்றனர்.

வேறு எந்த மாநில சட்டசபைக் காங்கிரஸ் தலைவர் தேர்தலின் போதும் தலையிடாத காங்கிரஸ் மேலிடம், ஆந்திராவில் மட்டும் தலையிடுவானேன்?

ஆந்திர உறுப்பினர்கள் தங்கள் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்க தங்களுக்கு முழுச் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்று ஒரு சாரார் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டுகிறார்களாம்.

இன்னும், முன்னாள் உதவி முதன் மந்திரி என். சஞ்சீவி ரெட்டியின் பெயரும், தலைவர் பதவிக்கு அடிபடுகிறது!

மேலிடம் மேற்கொண்டுள்ள சமரச முயற்சி வெற்றி பெறுவது ‘துர்லபம்’ என்றும், எப்படி... தலைவர் பதவிக்கு போட்டியும், அடிதடிச் சண்டையும் இருந்தே தீரும் என்றும் ...ற்று வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஆந்திர பிரதேச காங்கிரஸ் தலைவர் பதவிக்கும் அதே அளவில் போட்டியிருக்குமென்று கூறப்படுகிறது.

காளா வெங்கட்ராவ், சத்திய நாராயண ராஜு, என். ஜி. ரங்கா, கோதாரகுராமய்யா ஆகியோரின் பெயர்கள், ‘காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவிக்கு’ என்று சொல்லப்படுகின்றன.

திரு. பிரகாசத்திற்கு முதன் மந்திரி பதவி தரப்படாவிட்டாலும், அவரைத் திருப்திப்படுத்துவதற்காக, ஆந்திர காங்கிரஸ் ‘பார்லிமெண்டரி போர்டு’ என்று ஒன்றை நிறுவி, அவரை அதற்குத் தலைவராக்கி, அவரது அரிய அனுபவ யோசனைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறதாம்.

அந்தப் ‘பார்லிமெண்டரி போர்டு’, முதன் மந்திரி, உதவி முதன் மந்திரி, பிரதேச காங்கிரஸ் தலைவர், இன்னும் இரண்டொருவர் ஆகியோரைக் கொண்டதாயிருந்து, காங்கிரஸ் மேலிடம், மாநில மந்திரி சபை, பிரதேச காங்கிரஸ் கட்சி ஆகியவற்றிடையே சுமுகமான உறவு நிலைக்கச் செய்யும் பணியினை மேற்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது

சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர், பிரதேச காங்கிரஸ் தலைவர் ஆகிய பதவிகளுக்கு காங்கிரஸ்காரர்களிடையே நடைபெறும் போட்டியின் முடிவுகள் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவை.

அதிகாரிகள்மீது வழக்கு

புதுடில்லி, மார்ச் 11—

சென்ற ஆண்டில் செஜட் பதிவுள்ள 11 அதிகாரிகள்மீது வழக்குத் தொடர சர்க்காரின் அனுமதி கோரப்பட்டதாக உதவி உள்நாட்டு மந்திரி தத்தர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மாணவர் மன்றம்

13—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை, கோகலே மண்டபத்தில், சென்னை மாணவர் மன்றத்தின் 23-ம் ஆண்டு நிறைவு விழா, சென்னை மேயர் திரு. எம். ஏ. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்று மாலை 4 மணிக்கு ஓவியக் கண்காட்சியொன்றை திரு. சி. ஆர். சீனிவாசன் திறந்து வைப்பார். ‘கல்கி’ உருவப் படத்தை திரு. மீ. ப. சோமசுந்தரம் திறந்து வைப்பார். அமைச்சர் கனம் பி. பரமேஸ்வரன் பரிசுகள் வழங்குவார். இலவச அழைப்புச் சீட்டு உண்டு.

14—3—55 மாலை 5 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் மேற்படி விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி திரு. புருஷோத்தம் தலைமையில் நடைபெறும். போட்டிகளில் பரிசு பெற்ற குழந்தைகட்கு திரு என். சங்கரன் பரிசுகள் வழங்குவார்.

மறைந்த வீரன் சே எஸ். பாண்டியனின் திருமகள் தோழியர் ராஜேஸ்வரிக்கும்—தோழர் எம். துரைசாமிக்கும் 11—2—55 அன்று காலை 9 மணியளவில் சென்னை வண்ணைபம்பதி மணிகண்ட முதலி 1-வது தெரு, 39-வது எண் இல்லத்தில் திரு வி. பி. மாணிக்கவாசகம் நாடார் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ராசேந்திரன் ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு ஏராளமானபரிசுகளும் வழங்கப் பெற்றன. திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

சாதி வெறியால் வந்த வினை!

கல்கத்தா, மார்ச் 10—

சாதி முறையையும், தீண்டாமையையும் கடுமையாக அனுசரிக்கும் ஒரு வியாபாரியை, விளையாட்டாக, ஒரு நெருக்கூட்டும் பெண் தொட்டுவிட்டாள். அவ்வாறு அப் பெண் தன்னைத் தொட்டதை அவமானமாகக் கருதிய அவ்வியாபாரி, அப்பெண்ணைத் அடிக்க ஆரம்பித்தார்.

ஒரு பெண்ணை அவ்வியாபாரி தாக்குவதைக் கண்டு ஒரு பெருங் கூட்டம் அவரைத் தடுத்து நிறுத்தியது; இருதரப்பாரிடையே வாக்குவாதம் முற்றி கலவரமாக மாறியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாரோ ஒரு நபர் கூட்டத்தில் வெடிகுண்டு ஒன்றைப் போட, இதனால் அந்த வியாபாரியும், மற்றொருவரும் அந்த இடத்திலேயே மரணமடைந்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

தோழர் எம். ஆர். இராதா வழக்கு

சென்னை, மார்ச் 11—

நடிகத் தோழர் எம்.ஆர்.இராதாவும், அவருடன், கே. சத்தியமூர்த்தி என்ற மற்றொரு நடிகரும் இரண்டு தினங்களுக்கு முன்பு குடந்தையில் தடையுத்தரவை மீறி ‘இராமாயணம்’ நாடகம் நடத்தியதாகக் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுவிக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து கும்பகோணம் உதவி நீதிபதி நடிகத் தோழர் இராதா, குடந்தையை விட்டே வெளியேறி விட வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தது பற்றியும் செய்திகள் வந்துள்ளன.

குடந்தை நீதிபதியின் போக்கை எதிர்த்துத் தோழர் இராதா, சென்னை உயர் நீதிமன்றத்தில் செய்துகொண்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

நீதிபதி பஷீர் அகமது சையத், வழக்கை விசாரித்து, தோழர் இராதாவுக்கு விதிக்கப்பட்ட தடைகள், ‘முறையற்றவை’, ‘அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகளைப் பறிப்பவை’ என்று கூறி, சர்க்காருக்கு எதிர் வழக்காடுமாறு நோட்டீஸ் அனுப்புமாறும், தோழர் இராதாவுக்கு விடுதலை தந்து இடைக்கால உத்தரவு பிறப்பித்தும் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை.) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.